# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2024 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டம்*

---

[*2024 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2024, மே மாதம் 17 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***2024 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டம்***

[*2024 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ. ஓ 27/2022*

***(129 ஆம் அத்தியாயமான) கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயர்*

***1.*** *இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*129 ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்*

***2.*** *(இச்சட்டத்தில் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) (129 ஆம் அத்தியாயமான) கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-*

*(1)* *அதன் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்* (iii) *ஆம் உட்பந்தியில், “ஊழியத்திலமர்த்தப்படலாம்; அத்துடன்;” என்னும் சொற்களுக்குப்பதிலாக, “ஊழியத்திலமர்த்தப்படலாம்;” என்னும் சொல்லை இடுவதன்மூலமும்; அத்துடன்*

*(2)* *அதன் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்* (iv) *என்னும் உட்பந்தியில், “ஊழியத்திலமர்த்தப்பட லாம்.;”என்னும் சொல்லுக்குப் பதிலாக, “ஊழியத்திலமர்த்தப்படலாம்; அத்துடன் ” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்:-*

*(3)* *அதன் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்* (iv) *ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-*

"(v) பதினெட்டு வயதை எய்தியுள்ளவரான எவரேனும்பெண், தகவல்தொழில்நுட்பவியல் மற்றும் அறிவுச் செயல்முறைசார் வெளிவளப்பெறுகையை அல்லது தொழில் செயல்முறைசார் வெளிவளப் பெறுகையை அடிப்படையாகக் கொண்ட தொழிலில் ஈடுபடுகின்ற அல்லது வெளிநாட்டில் அமைந்துள்ள நிறுவகமொன்றுக்காகப் பின்னிலை அலுவலகமொன்றில் நிருவாகத்திலும் கணக்குகளிலும் அல்லது அதனுடன் தொடர்புபட்ட வேலையில் ஈடுபடு கின்ற ஏதேனும் நிறுவனத்தில் ஏதேனும் நாளில் முற்பகல் 6.00 மணிக்கு முன்னர் அல்லது பிற்பகல் 6.00 மணிக்குப் பின்னர் தொழிலுக்கமர்த்தப்படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(ஊஅ) எவரேனும் பெண்களை தொழிலுக்கமர்த்து கின்ற தொழில்தருநரொருவர், பிற்பகல் 10.00 மணிக்குப் பின்னரும் முற்பகல் 6.00 மணிக்கு முன்னரும் அத்தகைய பெண்களை தொழிலுக்கமர்த்துகின்றபோது அவர்களின் பாதுகாப்பு, போக்குவரத்து வசதிகள் மற்றும் ஓய்வுக்கான வசதிகள் என்பனவுட்பட அத்தகைய பெண்களின் சேமநலன் தொடர்பில் அத்தொழில்தருநரினால் பின் பற்றப்படவேண்டிய நியதிநிபந்தனைகள் தொடர்பானவை;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) “அலுவலகம்” என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தில் (அ) என்னும் பந்தியில், “அலுவலகம் அல்லது எழுதுவினைஞர் பகுதி; அத்துடன்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “அலுவலகம் அல்லது எழுதுவினைஞர் பகுதி;” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அதன் (ஆ) என்னும் பந்தியில், “நிறுவனங்கள் அல்லது தாபனங்கள்;” என்னும் சொற்களுக்குப் பதிலாக “நிறுவனங்கள் அல்லது தாபனங்கள்; அத்துடன்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அதன் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:-

“(இ) தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் அறிவுச் செயல்முறைசார் வெளிவளப் பெறுகையை அல்லது தொழில் செயல்முறைசார் வெளிவளப் பெறுகையை அடிப்படையாகக் கொண்ட தொழிலில் ஈடுபடுகின்ற அல்லது வெளிநாட்டில் அமைந்துள்ள ஏதேனும் நிறுவனத்துடன் இணைக்கப்பட்ட பின்னிலை அலுவலகமொன்றில் நிர்வாகத்திலும் மற்றும் கணக்குகளிலும் அல்லது அதனுடன் தொடர்புபட்ட வேலையில் ஈடுபடுகின்றதுமான ஏதேனும் நிறுவனம்;”.

**5.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை “பிரகாசன பியச”, அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*